மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அசல் வழக்கு எண்.221/2018

2025ம் ஆண்டு செப்டம்பர் 12ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மதியழகன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

12.09.2025 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. வாதி என்ன பரிகாரத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா சொத்தில் வாரிசுபடி தனக்கு அனுபவம் உள்ளதாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் பிறந்ததில் இருந்தே திருப்பூர் தான் வசித்து வருகிறேன். கிரையத்திற்கு முன்பு கிருஷ்ண சாமி செட்டியாரையோ அவர்களது வாரிசுகளையோ எனக்கு தெரியாது என்றால் ஆமாம். நான் கிருஷ்ணசாமி செட்டியாரை பார்த்ததில்லை என்றால் ஆமாம். தாவா சொத்துக்களை எனது தகப்பனார் கடந்த 08.08.1995ல் கிரையம் பெற்றார் என்றால் ஆமாம்.

2. எவ்வளவு கிரையம் பெற்றார் என்றால் பொதுவில் 4ல் 3 பங்கை கிரையம் பெற்றார். மொத்த விஸ்தீரணம் 8 செண்டில் 6 செண்ட்

கிரையம் பெற்றார். நாங்கள் கிரையம் பெற்ற பங்கை பிரித்துக் கொடுக்க சொல்லி இதுவரை நாங்கள் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் யார் என்று தெரியாததால் வழக்கு போடவில்லை. கிரையத்திற்கு பின்னிட்டு மீதமுள்ள 1 சென்ட் பூமி யாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரிந்துகொள்ள நாங்கள் முயற்சி செய்தோம் என்றால் முயற்சி செய்தோம் யார் என்று தெரியவில்லை.

3. மீதமுள்ள ஒரு பங்கு யாருடையது என்பதைப் பொறுத்து நான் என் தகப்பனாரிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். யார் என்று தெரியவில்லை. வந்து பங்கு கேட்டால் பார்த்து கொள்ளலாம் என்று சொன்னார். என் தகப்பனார் இறக்கும் வரை யாரும் வந்து பங்கு கேட்கவில்லை. வாதி யார் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தாவா சொத்து இதுவரை பிரிக்கப்படாமல் பொதுவில் தான் உள்ளது என்றால் சரிதான். ஒரு பங்கு யாருடையது என்பது தெரியாததால் தான் இதுவரை பாகப்பிரிவினை வழக்கு போடவில்லை என்றால் சரிதான்.

4. கிருஷ்ணசாமி செட்டியாருக்கு ஒரு மகன், ஒரு மகள் என்பது மட்டும் எனக்கு ஆவணங்கள் அடிப்படையில் தெரியும். கிருஷ்ணசாமி செட்டியாரின் வாரிசுகள் யார் என்பது பொறுத்து நான் ஆவணங்களை பார்க்கவில்லை என்றால் ஆமாம். வாதி கிருஷ்ணசாமி செட்டியாரின் மகள் என்ற அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். வாதி கிருஷ்ணசாமி செட்டியாரின் மகள் அல்ல

என்பதைப் பொறுத்து நான் யாரையாவது விசாரித்தேனா என்றால் இல்லை.

5. தாவா சொத்து இதுவரை காலியிடமாக உள்ளது என்றால் ஆமாம். அது 3 சொத்துக்களுக்கு மத்தியில் உள்ளது என்றால் ஆமாம். கிருஷ்ணசாமி செட்டியாரின் மகள் தான் இந்த வாதி என்றும் கிருஷ்ணசாமி செட்டியாரின் 3 வாரிசுகளிடமிருந்து தாவா சொத்தை என் தகப்பனார் கிரையம் பெற்றுவிட்டார் என்றும் அதனால் தான் வாதி தாவா சொத்தில் தனது பங்கை கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

6. தாவா சொத்தின் 3 பங்கை என் தகப்பனார் கிரையம் பெற்றதற்கு பின்னிட்டு வாதிக்கு பாத்தியப்பட்ட ஒரு பங்கை மிகவும் குறைந்த விலைக்கு கேட்ட கொடுக்க மறுத்ததால் வாதி கிருஷ்ணசாமி செட்டியாரின் வாரிசு என்று தெரிந்தும் அதை மறுத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி என் தகப்பனாரிடமும் என்னிடமும் பலமுறை தாவா சொத்தில் தனது பங்கை பிரித்துக் கொடுக்கும்படி கேட்டும் நாங்கள் மறுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. வாதி கிருஷ்ணசாமி செட்டியாரின் வாரிசு என்று தெரிந்து கொண்டும் இந்த வழக்கில் வாதியின் பங்கை பிரித்துக் கொடுக்காமல் பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

7. நான் திருப்பூரில் பிறந்ததிலிருந்து வசித்து வருவதால் தாவா சொத்தைப் பொறுத்தோ கிருஷ்ணசாமி செட்டியார் மற்றும் அவரது வாரிசுகளை பொறுத்தோ எனக்கு எதுவும் தெரியாது என்றும்

சொன்னால் சரியல்ல. வாதி கோரியபடி இந்த வழக்கு தீர்ப்பாகத்தக்கது என்றால் நீதிமன்றத்தின் முடிவுக்கு நான் விட்டுவிட்டேன். வாதி கோரியபடி இந்த வழக்கு தீர்ப்பாக வேண்டியது என்றால் சரியல்ல. மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.09.12 19:11:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்